**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

**MCOP No : 179/2023** **நாள் 08.08.2025**

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஓட்டுநரான சின்னமாரி த /பெ.கோவிந்தன் என்பவருக்கு சாட்சிய சம்மன்எடுக்கப்பட்டு சாட்சிய சம்மன் சார்பாகி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவரை மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு எ .ம.சா.1 ஆனவரை முதல் விசாரணை செய்யப்படுகிறார் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் M.சாரதிதேவி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னமாரி | தாலுகா | |
| த–பெ | கோவிந்தன் | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | பட்டுப்பூச்சி கிராமம் | வயது | 42 |

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கே.எஸ்.ஆர் பஸ் டிரான்போர்ட் கம்பெனியில் ஓட்டுநராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சிய சம்மன் சர்வானது . சாட்சிய சம்மனில் சொன்னவாறு 16.02.2023 ம் தேதி இரவு 8.10 மணிக்கு நான் TN 67 AZ 5223 என்ற எண்ணுள்ள கே.எஸ.ஆர் பயணிகள் பேருந்தை ஸ்ரீவில்லிபுத்துார் – வத்திராயிருப்பு ரோட்டில் ஓட்டிக்கொண்டு சென்றுகொண்டிருந்தேன். அந்த பேருந்தை நான் சேசாப்புரம் விலக்கு அருகில் நடத்துநர் விசில் அடித்தார் நான் பேருந்தை நிறுத்தி என்னவென்ற நடத்துனரிடம் கேட்டேன். அதற்கு அவர் வண்டியில் இருந்து பின் படிக்கட்டு வழியாக ஒருவர் சரியாக பிடிமானம் பிடித்துக்கொள்ளாமல் கீழே விழுந்துவிட்டதாக சொன்னார் அதன் பின்பு நாங்கள் கிருஷ்ணன்ே்காவில் காவல் நிலையத்திற்கு சென்றோம். நானும் நடத்துநரும் சேர்ந்து அந்த் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். இந்த விபரத்தை நானும் நடத்துனரும் சேர்ந்து எங்கள் கம்பெனிக்கு தெரியப்படுத்தினோம். நானும் நடத்துனரும் கீழே இறங்கி பார்த்த போது பேருந்தில் பயணம் செய்த பயணிகளும் இறங்கி பார்த்தார்கள். கீழே விழுந்தவர் குடிபோதையில் விழுந்துவிட்டதாக பேருந்தில் பயணம் செய்த பயணிகள் சொன்னார்கள். நான் பேருந்தை ஓட்டிக்கொண்டு சென்ற சமயத்தில் தான் இந்த சம்பவம் நடந்துள்ளது எந்த பேருந்தும் வாகனமும் என்வாகனம் மீது மோதவில்லை. நானும் சென்று மோதவில்லை என் மீது தவறு ஏதும் இல்லை . விபத்தானது பேருந்தில் இருந்து கீழே விழுந்தவரின் அஜாக்கிரதை மற்றும்

கவனக்குறைவால் தான் ஏற்பட்டது . அவர் பேருந்தில் கவனமாக பயணித்திருந்தால் இந்த விபத்து நடத்திருக்காது. கிருஷ்ணன்கோவில் போலிசார் எனக்கு தெிராக தான் வழக்கை பதிவு செய்தார்கள் .அந்த வழக்கு குற்றவியில் நடுவர் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

<u>குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்</u>

விபத்தில் இறந்துபோன இராஜ்குமார் என்பவர் கடந்த 16.02.2023 ம் தேதி நான் ஓட்டிச்சென்ற அந்த பேருந்தில் ஸ்ரீவில்லிபுத்துார் இருந்து சேத்துாருக்கு பயண சீட்டு எடுத்து பயணம் செய்தவர் என்றால் சரிதான் . அன்றை தினம் பேருந்தில் பயணிகள் அதிகம் இருந்தார்கள் என்றால் அப்படியில்லை . அந்த பேருந்தில் சுமார் 60, 70 பேர் பயணம் செய்திருப்பார்களா என்று கேட்டால் பேருந்தில் இருக்கையில் அமர்ந்தவர்கள் மற்றும் நின்றுகொண்டிருந்தவர்கள் சேர்த்து 55 முதல் 58 பேர் பயணம் செய்தார்கள் . விபத்தில் இறந்துபோன ராஜ்குமார் பின்பக்க படிக்கட்டில் மேலே நின்று தான் பயணம் செய்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த ஸ்ரீவில்லிபுத்துார் – வத்திராயிருப்பு செல்லும் சாலையில் அதிகமான வளைவுகள் உள்ளது என்றால் அதிகமான வளைவுகள் இல்லை . இந்தவிபத்து சம்மந்தமாக என்னுடைய அதிவேகம் அஜாக்கிரதை கவனக்குறைவால் தான் முன்னால் சென்ற வாகனத்தை சைடு வாங்க ஓட்டி செல்லும் போது தான் இந்த பேருந்தின் பின்பக்க படிக்கட்டில் நின்றுகொண்டிருந்த ராஜ்குமார் என்பவர் பேருந்தில் இருந்து தவறி கீழே விழுந்துவிட்டார் என்று சொல்லிதான் எனக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவாகியுள்ளது என்று சொன்னால் அப்படி தான் பதிவாகியுள்ளது . எனக்கு எதிராக பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ஆட்சேபித்து நான் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அதிவேகம் அஜாக்கிரதை கவனக்குறைவால்தான் நான் பேருந்தை ஓட்டிச்சென்றதால் தான் பேருந்தானது குலுங்கியதால் தான் பின்பக்க படிக்கட்டின் மேல்பக்கம் நின்றுகொண்டிருந்த ராஜ்குமார் கீழே விழுந்ததில் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல . இந்த விபத்தின் போது இறந்துபோன ராஜ்குமார் பயணச்சீட்டு எடுத்துக்கொண்டு பேருந்தில் பயணம் செய்தவர் என்பதால் மனுதாரருக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் விபத்து இழப்பீடு தொகையை செலுத்த வேண்டியது என்று சொன்னால்

**சரியல்ல. விபத்தில் இறந்துபோன ராஜ்குமார் என்பவர் மதுபோதையில் இருந்ததாக நான் இந்த மனுவிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 08th day of August 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.